www.StudyGuideIndia.com

**7066**

Register Number | | | | | | |

**Part III**

# பொருளியல் / ECONOMICS

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

$50 \times 1 = 50$

*குறிப்பு :* **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

$14 \times 1 = 14$

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக :

1. நிகர பொருளாதார நலம் பற்றிய கருத்தை எடுத்துரைத்தவர்

   அ) சாமுவேல்சன் ஆ) ஆல்ஃபிரடு மார்ஷல்

   இ) ஆடம்ஸ்மித் ஈ) இலயனல் ராபின்ஸ்.

2. முதலாளித்துவத்தை இயக்கும் அடிப்படை சக்தியாக விளங்குவது

   அ) திட்டமிடல் ஆ) தொழில்நுட்பம்

   இ) அரசு ஈ) இலாப நோக்கு.

3. நுகர்வோர் எச்சம் என்பது

   அ) தகுவிலை – உண்மை விலை

   ஆ) $MU_n = TU_n - TU_{n-1}$

   இ) தேவை = அளிப்பு

   ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

[ Turn over

www.StudyGuideIndia.com

4. தேவை விதி உணர்த்துவது

அ) விலை, பண்டங்களுக்கு உள்ள தலைகீழ் உறவு

ஆ) விலை, பண்டங்களுக்கு உள்ள நேரடி உறவு

இ) மேற்கூறிய இரண்டும்

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

5. அளிப்பை தீர்மானிக்கும் காரணி(கள்)

அ) உற்பத்தி தொழில்நுட்பம்

ஆ) உற்பத்திக் காரணிகளின் விலை

இ) வரிகளும் சலுகைகளும்

ஈ) இவை அனைத்தும்.

6. சமநிலை புள்ளியில்

அ) ஒரே விலை நிலவும்

ஆ) தேவையும் அளிப்பும் சமம்

இ) அப்புள்ளியில் தேவைக்கோடு அளிப்புக்கோட்டை வெட்டும்

ஈ) இவை அனைத்தும்.

7. முதலுக்கு அளிக்கப்படும் ஊதியம்

அ) வட்டி ஆ) இலாபம்

இ) கூலி ஈ) வாடகை.

8. சராசரி செலவு இதனால் வகுக்கும்போது கிடைக்கும்

அ) TC/Q

ஆ) TFC/Q

இ) TVC/Q

ஈ) இவற்றுள் எதுவுமில்லை.

www.StudyGuideIndia.com

9. நிறுவனம் மற்றும் தொழிற்சாலை ஒரே நிலையில் இருப்பது

அ) நிறைவுப்போட்டி  ஆ) இரு விற்பனையாளர்

இ) சில்லோர்  ஈ) முற்றுரிமை.

10. போலி வாரம் என்ற கருத்தின் ஆசிரியர்

அ) ஆடம்ஸ்மித்  ஆ) மார்ஷல்

இ) ரிக்கார்டோ  ஈ) சாமுவேல்சன்.

11. பேரியல் பொருளியல் சிந்தனையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவர்

அ) டேவிட் ரிக்கார்டோ  ஆ) J. M. கீன்சு

இ) ஆடம் ஸ்மித்  ஈ) மால்தஸ்.

12. இறுதிநிலை நுகர்வு நாட்டம்

அ) $\frac{\Delta S}{\Delta Y}$

ஆ) $\frac{C}{Y}$

இ) $\frac{\Delta P}{\Delta Q}$

ஈ) $\frac{\Delta C}{\Delta Y}$.

13. வங்கி வீதம் எப்போது உயர்த்தப்படுகிறது ?

அ) பணவாட்டம்

ஆ) பணவீக்கம்

இ) விலை நிலையாக இருத்தல்

ஈ) வேலையின்மை.

14. அரசினால் விதிக்கப்படும் கட்டாய கட்டணம் என்பது

அ) அனுமதி/உரிம கட்டணம்  ஆ) வெகுமதி மற்றும் மானியம்

இ) கடன்  ஈ) வரி.



www.StudyGuideIndia.com

II. கோடிட்ட இடங்களை நிரப்புக : 12 × 1 = 12

15. பண்டங்களுக்கு, பண்டங்களை மாற்றிக் கொள்வது ...................... ஆகும்.

16. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு ...................... எனவும் அழைக்கப்படுகிறது.

17. இறுநிலைப் பயன்பாடு பூஜ்ஜியமாகும் போது, மொத்தப் பயன்பாடு ...................... ஆகும்.

18. விலைமாற்றத்தால் ஏற்படும் அளிப்பு மாற்ற வீதம் ...................... எனப்படும்.

19. ...................... விலையில், எந்த சக்தியும் விலையையோ அளவையோ மாற்ற முடியாது.

20. நாடுகளின் செல்வமும் அதை உருவாக்குகின்ற காரணிகளைப் பற்றிய ஆய்வு என்ற நூலை எழுதியவர் ...................... .

21. மொத்தச் செலவு என்பது ...................... .

22. நிறைவுப் போட்டியில் ஒரு நிறுவனம் ...................... .

23. பணக்கூலி என்பதை ...................... கூலி என்றும் அழைக்கலாம்.

24. ...................... என்பது மக்களின் கையிருப்பு ( ரொக்கம் ) பணம் ஆகும்.

25. பரிமாற்றச்சமன்பாடு ( MV = PT ) என்பதை அளித்தவர் ...................... .

26. ...................... என்பது பல்வேறு வழிகளில் அரசுக்கு வரும் வருவாய்.

www.StudyGuideIndia.com

III. கீழ்வருவனவற்றைப் பொருத்துக : $12 \times 1 = 12$

| | |
|---|---|
| 27. முதல் நோபல் பரிசு | அ) மார்ஷல் |
| 28. சந்தை சக்திகள் | ஆ) ஆண்டு இருப்பை விற்றுத் தீர்க்க |
| 29. பொருளாதார கோட்பாடுகள் | இ) $TC_n - TC_{n-1}$ |
| 30. குறுக்குத் தேவை நெகிழ்ச்சி பூஜ்யம் | ஈ) $C + S$ |
| 31. தள்ளுபடி விலை அல்லது கழிவு விலை | உ) சிறந்த வரி முறை |
| 32. இடர்பாடுகளின் தொகுப்பு | ஊ) கோகோ-கோலா |
| 33. $MC_n$ | எ) டிம்பர்கன் மற்றும் ஃப்பிரிஷ் |
| 34. தொழில்நுட்ப முற்றுரிமை | ஏ) $X$ மற்றும் $Y$ தொடர்புடையன அல்ல |
| 35. இயங்குநிலை இலாபக் கோட்பாடு | ஐ) அளிப்பு, தேவை மற்றும் விலை |
| 36. $Y =$ | ஒ) ஹாலே |
| 37. மலிவுப் பணக் கொள்கை | ஓ) கிளார்க் |
| 38. வளர்வீத வரி | ஔ) குறைந்த வட்டி வீதம். |



www.StudyGuideIndia.com

IV. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக: 12 × 1 = 12

39. இலவச பண்டங்களுக்கு ஓரிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

40. பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் வெற்றி பெற்ற இரு நாடுகளைக் கூறுக.

41. நிதிநிலைக் கோட்டிற்கு மற்றொரு பெயர் என்ன ?

42. பொருளாதாரக் கோட்பாட்டின் அடிப்படை எடுகோள் எது ?

43. நிலையான முதலீட்டிற்கு ஒரு உதாரணம் கொடு ?

44. சமுதாய மாற்றம் காணும் முகவர் யார் ?

45. இறுதிநிலை வருவாய் என்பது என்ன ?

46. தொழிற்சாலை என்றால் என்ன ?

47. சும்பீட்டரின் இலாபக் கோட்பாட்டின் பெயர் என்ன ?

48. பெருக்கியின் வாய்பாட்டை எழுதுக.

49. நாட்டின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தும் வங்கி எது ?

50. VAT என்பதன் விரிவாக்கம் யாது ?

## பகுதி - ஆ

V. *குறிப்புகள் :* i) எவையேனும் **பத்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *நான்கு* அல்லது *ஐந்து* வரிகளில் அமைந்திட வேண்டும். 10 × 3 = 30

51. இலவசப் பண்டங்கள் மற்றும் பொருளாதாரப் பண்டங்களை வேறுபடுத்துக.

52. பொதுவான பொருளாதார முறைகளின் பெயர்களைக் கூறுக.

53. பொதுவுடைமையின் அடிப்படைச் சிறப்பம்சங்களை கூறுக.

54. சமநோக்கு வளைகோட்டின் பண்புகள் யாவை ?

55. தேவைக்கோடானது ஏன் கீழ்நோக்கி வருகிறது ?

56. சமநிலை விலை என்றால் என்ன ?

57. நீண்டகாலம், குறுகிய காலம் வேறுபடுத்துக.

www.StudyGuideIndia.com

58. பயன்பாட்டின் வகைகளைக் கூறுக.

59. வேலைபகுப்பு முறை என்பதன் பொருள் யாது ?

60. வாய்ப்புச் செலவு என்றால் என்ன ?

61. *MC* மற்றும் *AC*-க்கு இடையேயுள்ள உறவுகளைக் கூறுக.

62. உண்மைக் கூலிக்கும், பணக் கூலிக்கும் உள்ள வேறுபாடு யாது ?

63. நீர்மை விருப்பக் கோட்பாட்டின் மூன்று நோக்கங்களைக் கூறுக.

64. பணத்தின் இலக்கணத்தை கூறுக.

65. பொதுநிதியின் பாடப்பொருள் ( subject matter ) என்ன ?

## பகுதி - இ

VI. *குறிப்புகள் :* i) எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *ஒரு பக்க* அளவில் அமைந்திட வேண்டும்.

$6 \times 10 = 60$

66. முதலாளித்துவத்தின் சிறப்பு பண்புகளை விளக்குக.

67. அங்காடிக் காலத்தில் சமநிலை விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது ?

68. மூலதனத்தின் பண்புகளை வரிசைப்படுத்தி விளக்குக.

69. AR மற்றும் MR கோடுகளின் இடையேயான உறவுகள் எழுதுக.

70. இறுதிநிலைச் செலவினை சரியான விளக்கத்துடன் கூறுக.

71. அங்காடியின் வகைகளை சுருக்கமாக விளக்கவும்.

72. சேயின் அங்காடி விதியின் குறைபாடுகளைக் கூறுக.

73. கீன்சின் வருமான நிர்ணயம் பற்றிய எளிய கோட்பாட்டின் எடுகோள்களை விளக்குக.

74. ஆண்டு நிதிநிலை அறிக்கை என்பதை விளக்குக. சமநிலை மற்றும் சமநிலையற்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையை விவரிக்கவும்.

75. நேர்முகவரி மற்றும் மறைமுகவரியை வேறுபடுத்திக் காட்டுக.

[ Turn over

www.StudyGuideIndia.com

## பகுதி - ஈ

VII. *குறிப்புகள் :* i) எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொரு விடையும் *மூன்று* பக்க அளவில் அமைந்திட வேண்டும்.

$3 \times 20 = 60$

76. பொருளாதார விதிகளின் தன்மை மற்றும் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

77. மனித விருப்பங்களின் பண்புகள் யாவை ?

78. விலைத்தேவை நெகிழ்ச்சியினை அளவிடும் முறைகளை விவரமாக எழுதுக.

79. முற்றுரிமையில் விலை மற்றும் பண்டம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது என்பதை விவரிக்கவும்.

80. ரிக்கார்டோவின் வாரக் கோட்பாட்டினை ஆராய்க.

81. பணக் கொள்கையின் நோக்கம் மற்றும் கருவிகளை விவாதிக்கவும்.

www.StudyGuideIndia.com